மலர் 2 இதழ் 4 ஏப்ரல் 2018

ISSN 2454-3993

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்



JOURNAL WITH IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

காலாண்டிதழ்

UGC Approved Journal Number: 40729

## Shanlax International Journal of Tamil Studies

A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal

Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

ज्ञान-विज्ञान विमुक्तये

SHANLAX INTERNATIONAL JOURNALS

SHANLAX

www.shanlaxjournals.in

மலர்.2 இதழ்.4 ஏப்ரல், 2018 காலாண்டிதழ் ISSN: 2454-3993

UGC Approved Journal Number: 40729 Impact Factor: 3.085

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

## Shanlax International Journal of Tamil Studies

A Peer-Reviewed-Refereed/Scholarly Quarterly Journal with Impact Factor

**சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்**
61,66 வி.பி. வணிக வளாகம்
T.P.K. பிரதான சாலை, வசந்த நகர்
மதுரை – 625 003
தமிழ்நாடு – இந்தியா
மின்னஞ்சல் : editorsij@shanlaxjournals.in
வலைமுகவரி : www.shanlaxjournals.in
தொடர்புக்கு : 9043303383

30 தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெண்ணுரிமை 146
சு. கிருஷ்ணமூர்த்தி

31 குறுந்தொகையில் இனவரைவியல் 151
கு. கவிதா

32 ஆற்றுப்படையில் உணவுசார் புழங்குபொருள் 156
ம. சுகன்யா

33 சங்கப் பெண்பாற் புலவர் பாடல்களின் உளவியல் பார்வை 160
சு. ஆஷா

34 திருக்குறளின் இன்பத்துப்பாலும் பேரின்ப விளக்கமும் 167
முனைவர் த. மைக்கேல்

35 நற்றிணையில் பூச்சிகள் 173
சு. உமா

36 வள்ளலாரின் ஆன்மீகப் பரிணாமம் 178
ச. பத்மாதேவி

37 சங்ககால நாடக மகளிர் (ஆடற்மகளிர்) 181
கி. மகாலட்சுமி & மு. சுப்பையா

38 பாகவத மேளா – தமிழர்களன் செவ்வியல் நாட்டிய மரபு 188
சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் & மு. சுப்பையா

39 பட்டினத்தார் பாடல்களில் திருவாசக நெறி 195
இராம. மோகன்

40 ஒப்பியல் நோக்கில் காதா சப்தசதி நாலடி உணர்த்தும் அறம் 200
பெ. சுமதி

41 நெய்தல் நில மக்களின் நம்பிக்கைகள் 209
சி. முத்துக்கிருஷ்ணன்

42 தமிழனின் கடவுள் வழிப்பாட்டில் நிறைந்துள்ள 213
அறிவியல் உண்மைகள்
ஜெ. திருப்பதி

43 சமகால வரலாறும் புனைவாக்க அரசியலும் 217
வி.காயத்ரி பிரியதர்ஷினி

44 கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் மக்களின் வாழ்வியல் 221
கூ. ரேணுகாதேவி

மலர் 2 இதழ் 4 ஏப்ரல் 2018 ISSN: 2454-3993

# நற்றிணையில் பூச்சிகள்

முனைவர் க. உமா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி
மேலப்பாளையம்,

**பூச்சிகள் (Insects)**

பூமியில் வாழும் உயிரினங்களிலேயே அதிக எண்ணிக்கையில் வாழ்பவை பூச்சியினங்களே ஆகும். உலகில் சுமார் ஏழு இலட்சம் பூச்சியினங்கள் வாழ்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாம் வாழும் பூமியில் முதலில் தோன்றிய இனங்கள் பூச்சிகளே. பூமியில் மட்டும் வாழ்ந்து வந்த அவை இறக்கைகள் கிடைத்தபின் வானத்தையும் வெற்றி கொண்டன. இப்பூமியில் வாழும் உயிரினங்களில் முக்கால் பங்கு பூச்சிகளே ஆகும். பூச்சிகளின் உலகில் பல வேறுபட்ட வடிவங்களையும், ஒரே பிறவியில் பல தோற்றங்களையும் அவை பெறுகின்றன. இவ்வகைப் பூச்சியினங்கள் என பகுக்கப்பட்டுள்ளனவற்றில் நற்றிணையில் காணப்படும் பூச்சிகளைக் குறித்து இங்கு காண்போம்.

**ஈயல்**

ஈயல் என்பது ஒரு பூச்சியாகும். இதைத் தற்காலத்தில் 'ஈயல்' என்றும் 'கரையான்' என்றும் செல் என்றும் அழைப்பர். சங்க நூல்களில் ஈயலை 'சிதலை' என்றும் குறிப்பிட்டனர்.

**'நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல்' (நற்.59)**

நெடுங்கோட்டுப் புற்றில்வாழும் ஈயல் என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. கரையான் கட்டியபுற்றுகளிலேயே பாம்புகள் வாழ்கிறது. "கரையான் புற்றுகளில் பல உறுதியானவை. யானைகள் கால் வைத்தால் கூட சில கரையான் புற்றுகள் அழிவதில்லை"என்பர். (இராம்குமார், 'பூச்சிகளின் புதுமை உலகம்', (ப.103)) மண்ணில் வாழும் ஈயல் 'ரினோடெர்மிடிடே' (Rhino termitidae) என்று அறிவியலில் அழைப்பர். கட்டிடங்களில் அரித்து வாழும் ஈயலினத்தை 'காலர் மிட்டிடே மாஸ்டோ டெர்மிட்டிடே' (Kalermitidae Masto Termitidae) என்னும் வகையைச் சார்ந்தவையாகும். பொதுவாகக் காணப்படும் ஈயல் 'ஓடோன்டெரஸ் ரெடிமனிஸ் மிக்ரோஸ்டிரேஸ்செஸி' (Odonterous redemannis Microstmrese Chesi) 'காப்டோடெர்ப்ஸ் ஹொய்னி ஹொட்டெரோ டெர்ம்ஸ் இண்டி கோலா' (Coptotermes Haini Hetero termes Indicola) ஆகிய குடும்பங்களைச் சேர்ந்ததாகும்.

**சிலம்பி**

நற்றிணையில் கூறப்படும் பூச்சிகளுள் சிலம்பியும் ஒன்றாகும்.

**"கொலைவல் வேட்டுவன் வலைபுரிந்து போகிய**
**கானப் புறவின் சேவல் வாய் நூல்**
**சிலம்பி அம்சினை வெரூஉம்**
**அலங்கல் உலவை அம்காடு இறந்தோரே" (நற்.180)**

வேட்டுவன் போட்ட வலையிலிருந்து தப்பிய புறா கருவேல மரத்தில் சிலம்பியால் கட்டப்பட்ட வலையைக் கண்டு அஞ்சுவதாகக் கூறப்பட்டுள்ளது. சிலம்பி தன் வாய்நூலால் வலை நெய்யும் என்பதையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது.

சிலந்திப் பூச்சியை விடாமுயற்சிக்கு அடையாளம் என்று சொல்வார்கள். சிலந்திப்பூச்சியானது, மற்ற பூச்சி இனங்களிலிருந்து சில மாற்றங்களைப் பெற்ற ஒன்றாகும். பொதுவாகப் பூச்சிகளுக்கு மூன்று இணைக்கால்களே இருக்கும். ஆனால், சிலந்திக்கு நான்கு இணைக்கால்கள் உண்டு.

INDEX COPERNICUS
INTERNATIONAL
IC VALUE: 23.21 POINTS

I2OR

Google scholar

Academic Resource Index
ResearchBib

INFOBASE INDEX
IMPACT FACTOR: 3.085

GENERAL IMPACT FACTOR

SHANLAX INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES
#61,66, TPK Main Road, Vasantha Nagar
Madurai – 625 003. Tamil Nadu, India
Office: +91 452 4208765 | Mobile: +91 90 4330 3383
Email: editorsij@shanlaxjournals.in | Web: www.shanlaxjournals.in